பாதுகாப்பு அமைச்சு

# தேசிய பாதுகாப்பு கற்கைகள் நிறுவனம்

# பதவி வெற்றிடம்

பாதுகாப்பு அமைச்சின் கீழ் இயங்குகின்ற தேசிய பாதுகாப்பு கற்கைகள் நிறுவனத்தில் கீழ்வரும் பதவி வெற்றிடத்திற்கு தற்காலிக அடிப்படையில் சேர்த்துக்கொள்வதற்காக தகுதியுடைய இலங்கை பிரஜைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**01. பதவி : ஆராய்ச்சி பகுப்பாய்வாளர் (வெற்றிடம் 02)**

**மாதாந்த கொடுப்பனவு : அடிப்படை சம்பளம் ரூ.53,150/- + வாழ்கை செலவு கொடுப்பனவு ரூ.7,800/- = ரூ.60,950.00/-**

**தகைமைகள் : கல்வி தகைமைகள்**

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட பல்கலைக்கழகத்தில் அல்லது பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் பட்டமளிக்கப்படும் நிறுவனமாக ஏற்றுக்கொள்ளப்பட்ட நிலையத்தில் அல்லது வழங்கப்பட்ட சர்வதேச தொடர்புகள்/ சமாதானம் மற்றும் மோதல்களைத் தீர்த்தல் கல்வி/ பாதுகாப்பு கற்கைகள் / புலனாய்வு சேவைகள் கல்வி/ தீவிரவாதம்/ சமூக விஞ்ஞானம்/ அரசறிவியல்/ சட்டம்/ பொருளியல் தொடர்பான இளங்களை பட்டம் மற்றும் ஆராய்ச்சி பகுப்பாய்வில் டிப்ளோமா நிலை பட்டம் பெற்றிருத்தல் வேண்டும்.

**அனுபவம்** : ஆராய்ச்சி செயற்பாடுகள் தொடர்பான துறையில் பெற்றுக்கொண்ட முகாமைத்துவ மட்டத்தில் குறைந்தது 02 வருட அனுபவம் பெற்றிருத்தல்

**வயது** : 21 வயதிற்கு குறையாமலும் 45 வயதிற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

**02. பதவி : உதவி ஆராய்ச்சியாளர் (வெற்றிடம் 03)**

**மாதாந்த கொடுப்பனவு : அடிப்படை சம்பளம் ரூ.32,200/- + வாழ்கைச் செலவு கொடுப்பனவு ரூ.7,800/- ரூ.40,000.00/-**

**கல்வி தகைமைகள்** : கல்வி தகைமைகள் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட பல்கலைக்கழகத்தில் அல்லது பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் பட்டமளிக்கப்படும் நிறுவனமாக ஏற்றுக்கொள்ளப்பட்ட நிலையத்தில் அல்லது வழங்கப்பட்ட சர்வதேச தொடர்புகள்/ சமாதானம் மற்றும் மோதல்களைத் தீர்த்தல் கல்வி/ பாதுகாப்பு கற்கைகள்/ புலனாய்வு சேவைகள் கல்வி/ தீவிரவாதம்/ சமூக விஞ்ஞானம்/ அரசறிவியல்/ சட்டம்/ பொருளியல் தொடர்பான பட்டப்பின் கல்வி பட்டம் பெற்றிருத்தல் வேண்டும்.

**அனுபவம்** : குறித்த பதவி தொடர்பான முன்அனுபவம் காணப்படின் விசேட தகைமையாக கருதப்படும்.

**வயது** : 18 வயதிற்கு குறையாமலும் 45 வயதிற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

- ஆட்சேர்ப்பு முறை : தகுதி மதிப்பு நேர்முகப் பரீட்சையின் பெறுபேறுகளின் ஆகக்கூடிய புள்ளிகளை பெறுகின்ற விண்ணப்பதாரி சேர்த்துக்கொள்ளப்படுவர்.
- மேற்கூறிய பதவிக்கு தகுதியுடைய விண்ணப்பதாரிகள் விண்ணப்பப்பத்திரத்தினை **2023.01.15** திகதியில் அல்லது அதற்கு முன்னர் **செயலாளர், பாதுகாப்பு அமைச்சு, பாதுகாப்பு தலைமையக கட்டிட தொகுதி, ஸ்ரீ ஜயவர்தனபுர, கோட்டே** என்ற முகவரிக்கு பதிவு தபாலில் அனுப்பி வைத்தல் வேண்டும்.
- கடித உறையில் இடது பக்க மேல் மூலையில் "தேசிய பாதுகாப்பு கற்கைகள் நிறுவனத்திற்கு **ஆராய்ச்சி பகுப்பாய்வாளர் / உதவி ஆராய்ச்சியாளர் பதவிகளுக்காக விண்ணப்பக்கோரல்**" எனத் தெளிவாக குறிப்பிடல் வேண்டும். உரிய தினத்திற்கு பின்னர் கிடைக்கும் விண்ணப்பபத்திரங்கள் நிராகரிக்கப்படும் என்பதை தெரிவித்துக்கொள்கின்றேன்.

மேலதிக தகவல்களுக்கு **www.defence.lk** இணையத்தளத்திற்கு பிரவேசிக்கவும்.

**செயலாளர்,**
**பாதுகாப்பு அமைச்சு**
**பாதுகாப்பு தலைமையக கட்டிட தொகுதி,**
**ஸ்ரீ ஜெயவர்தனபுர , கோட்டை.**